## *11.* பரீட்சைத் திட்டம் *:-*

### *11.1* எழுத்துப் பரீட்சை *:-*

இப் பரீட்சை கீழ்வருமாறு இரண்டு(02) வினாத்தாள்களைக் கொண்டிருக்கும். இது தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய இரு மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பித்த மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

| இல | வினாப் பத்திரம் | பாட விதானம் | நேரம் | புள்ளிகள் |
|---|---|---|---|---|
| *01* | உளச்சார்புப் பரீட்சை மற்றும் பொது அறிவு | இவ்வினாத்தாளானது எண்கணிதத் திறன், தர்க்கரீதியான திறன் மற்றும் பொது உளச்சார்பு, உள்ளூர் & சர்வதேச விடயங்கள் போன்றவற்றில் விண்ணப்பதாரரியினுடைய அறிவுத் திறனை அளவிடுவதற்கான முறையில் அமைந்திருக்கும் | *01* மணித்தியாலம் | *100* |
| *02* | மொழித் திறன் | இவ்வினாத்தாளானது முடிவுகளை வரைதல், கிரகித்தல், பிழைகளைக் கண்டிறிதல், கட்டுரைகளின் இலக்கணப் பயன்பாடு போன்றவற்றில் விண்ணப்பதாரியினுடைய அறிவுத் திறனை பரீட்சிக்கும் வகையான வினாக்களைக் கொண்டிருக்கும். | *01 1/2* மணித்தியாலங்கள் | *100* |

குறிப்பு *:-*

இப்பரீட்சை ஒரு போட்டிப் பரீட்சையாக இருப்பதால் நேர்முகப் பரீட்சைக்கு தகைமை பெறுவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் குறைந்தபட்சம் நாற்பது வீதம் (40%) பரீட்சார்த்திகள் பெற்றுக்கொள்ள வேண்டும். எனினும் விண்ணப்பதாரிகள் பெற்ற மொத்தப் புள்ளிகளின் வரிசை ஒழுங்கிலேயே (Merit Order) நியமனம் வழங்கப்படும்.

### *11.2* பிரயோகப் பரீட்சை *:-*

எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகளுக்கு பிரயோகப் பரீட்சையாக கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஒன்றிற்குத் தேற்ற வேண்டும். இதற்காக கீழ் குறிப்பிடப்பட்டவாறு புள்ளிகள் வழங்கப்படும்.

| இல | விடயம் | மொத்தப் புள்ளிகள் | சித்திப் புள்ளிகள் |
|---|---|---|---|
| *01.* | **தொடர்பாடல் திறன்**<br>நடவடிக்கைகளின் போதான வெளிப்பாடு<br>(உ-ம் : கதை சொல்லுதல்) | *20* | *8* |
| *02.* | **படைப்பாற்றல்**<br>படைப்பாற்றலினை அளவிடுதல்<br>(உ-ம் : பரீட்சார்த்திகளின் மாதிரிகள் உருவாக்கம் தொடர்பாக எதிர்பார்க்கப்பட வேண்டும்) | *20* | *8* |
| *03.* | **பொறுமை**<br>குழந்தைகளின் எதிர்பாராத நடவடிக்கைகளின் போதான அவர்களின் செயற்பாடுகள் | *20* | *8* |
| *04.* | **நெகிழ்வுத் தன்மை**<br>வேறுபட்ட சூழல்களில் கற்பித்தல் நடவடிக்கைகள் | *20* | *8* |
| *05.* | **ஆற்றல் / சக்தி**<br>குழந்தைகளின் ஆற்றல் / சக்தியினை ஊக்கப்படுத்தல் | *20* | *8* |
| **மொத்தம்** | | ***100*** | ***40*** |

குறிப்பு *:*

*01.* ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் பிரயோகப் பரீட்சைக்கென *15* நிமிடங்கள் வழங்கப்படும்.
*02.* பரீட்சார்த்தி பிரயோகப் பரீட்சையின் சகல விடயங்களிலும் சித்தியடைதல் வேண்டும்.
*03.* பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சை சபைக்கு தமது அனுபவம் தொடர்பான சான்றிதழ்களை சமர்ப்பிக்க எதிர்பார்க்கப்படுகின்றனர்.

